## சென்னை சரவண பவன் ஓட்டலில்

# ரசத்தை ருசித்த ராகுல்

# 112 ரூபாய் 'டிப்ஸ்'

**சென்னை, அக். 22-**

சரவண பவன் ஓட்டலில் தென் இந்திய உணவு வகைகளை சுவைத்து சாப்பிட்ட ராகுல் காந்தி, ஊழியர்களுக்கு 112 ரூபாய் டிப்ஸ் கொடுத்தார்.

தமிழகத்திற்கு வந்திருந்த ராகுல்காந்தி, திருச்சி சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு டெல்லி திரும்பினார். வழியில் அவர் சென்னையில் சிறிது நேரம் ஓய்வெடுத் தார். அப்போது அவர் மதிய உணவுக் காக அசோக் பில்லர் அருகே உள்ள சரவண பவன் ஓட்ட லுக்குச் சென்றார்.



பகல் 12.20 மணிக்கு போலீசார் அந்த ஓட்டலுக்குச் சென்றனர். ஓட்டல் மேனே ஜரை சந்தித்து, ''முக்கிய பிரமுகர்கள் யாராவது வந்து இருக்கிறார்களா?'' என்று விசாரித்தனர். விசாரித்து முடிப்ப தற்குள் ராகுல் காந்தி அங்கு வந்தார். ஓட்டல் மேனேஜர் சேது, அவரை வரவேற்று குளு குளு அறையில் அமர வைத்தார். அவருடன் நான்கு சகாக்களும், பாதுகாப்புப் போலீசாரும் இருந்தனர்.

ராகுல் காந்தியிடம் மெனு அட்டை வழங்கப்பட்டது. ஆனாலும் அதைப் பார்க்காமலேயே அவர் ஆர்டர் கொடுத்தார். அதன்படி அவருக்கு தயிர் வடை, ஒரு குவளை காலிஃப்ளவர் ரசம், இரண்டு அப்பளம், காய் கறி மசாலாவுடன் கூடிய ஒரு கார தோசை, ஆரஞ்சு பழரசம் ஆகியவை பரிமாறப்பட்டன. உடன் இருந்தவர்களும் அவற்றையே சாப்பிட்டனர். ஓட்டலில் நுழையும் போதே, 'கட்டாயமாக பில் தொகை பெற்றுக் கொள்ள வேண்டும்'' என்று ராகுல் காந்தி கூறி இருந்தார். எனவே 785 ரூபாய்க்கான பில் வழங்கப்பட்டது. பில்லை வாங்கிப் பார்த்த ராகுல்காந்தி, தன் சகாக்களிடம் கூறி பில் தொகையை கொடுக்கச் சென்னார். பின்னர் அவரே 112 ரூபாய் டிப்ஸ் கொடுத்தார்.

பாதுகாப்பு அதிகாரிகளின் வேண்டு கோளின் படி, ராகுல் காந்திக்குப் பரிமாறப்பட்ட உணவு வகைகளின் ஒவ்வொரு சாம்பிளும் பொட்டல வடிவில் அந்த அதிகாரிகளிடம் ஓட்டல் தொழிலாளர்கள் வழங்கினர். பகல் 1.15 மணிக்கு ராகுல்காந்தி அங்கிருந்து சென்றார்.